உ

கடவுள் துணை.

நம்மவர் நூற்றெட்டு.

இது

திருவையாறு ஜ்யோதிஷ தந்திர ஸபையை ஸ்தாபித்தவரும்,

ப்ருஹத் ஸம்ஹிதை, ப்ருஹத் ஜாதகம், ஜினேந்திரமாலை

முதலிய அரிய சோதிட நூல்களை ஆங்கிலத்தில்

மொழிபெயர்த்தவரும் ஆகிய

N. சிதம்பரம் ஐயர் அவர்கள் B. A., F. T. S.,

இயற்றியது.

LIB
MADRA

(மூன்றாம் பதிப்பு)

சென்னை

சுதேசமித்திரன் ஸ்டீம் பிரஸில் அச்சிடப்பட்டது.

1913.

(பிரமாதீச வருஷம்)

விலை அணு 3.] [தபாற்கூலி வேறு.

CONTENTS.

	Page
Preface	4
Introduction	5
சாத்துகவிகள்	15
காப்பு	17
மூவர் வணக்கம்	17
I லௌகிகர்	
(1) வீணர்	18
(2) சாருவாகர்	19
(3) குடிகேடர்	20
(4) பதிதர்	21
(5) புலையர்	22
(6) குடியர்	23
II நடுவர்	
(1) பயிரிடுவோர்	24
(2) பயிரிடுவோர் வருந்தல்	25
(3) பல தொழிலாளர்	26
(4) ப்ரட்டர்	27
(5) தப்புநடையார்	28
(6) நடுவர் தம்மக்கள் இங்கிலீஷ் கற்கத் துணிதல்	29
III வைதிகர்	
(1) சூத்திர புரோகிதர்	30
(2) சாமான்ய வைதிகர்	31
(3) பிராமண புரோகிதர்	32
(4) வைதிகர் வருந்தல்	33
(5) வைதிகர் தம்மக்கள் இங்கிலீஷ் கற்கத் துணிதல்	34
(6) வைதிகர் மட்டிடல்	35

PREFACE.

At the request of several friends, I have now brought out a third edition of "நம்மவர் நாற்றெட்டு" written by my brother, the late Mr. N. Chidambaram Aiyar B.A., F.T.S.

The author was well known as the translator of the Astrological works, the "Brihat Samhita" and the "Brihat Jataka" of Varaha Mihira, and some other standard treatises on Astrology. He received a complete western education nearly half a century ago and like many others of his age imbibed at first materialistic views of the occidental school. He perceived a gradual decline of orthodoxy in some of the Brahmins and embodied his views of their conditions in elegant Tamil verses, in a style, at once simple and humorous.

The author contributed several articles to the "Hindu" and the "Theosophist." One of his articles "The Hindu Social and Spiritual outlook" which appeared in the "Hindu" of the 26th September 1888 is printed as an Introduction to this book.

The book has been slightly retouched here and there and my thanks are due to M.R.Ry. V. Muttuswami Aiyar M.A., L.T. for his valuable help in the bringing out of this Edition.

17, Big Street,
Triplicane.

N. VISVANATHA AIYAR.

INTRODUCTION.

The structure of the Indian society has been different from time immemorial from that of the European. It consisted of the Brahmins and the non-Brahmins. It was the duty of the former to promote the spiritual comfort of all, while the duty of the latter was to promote their material comforts. Each reciprocally was essential to the other. The Brahmins were learned in the sciences and the non-Brahmins in the numerous arts of life. The latter again consisted of the Kshatriyas, whose duty it was to govern the land and protect the men from foreign invasions, and of the Vaisyas, whose duty it was to trade in the produce of the land and the fruits of the industrial arts, and of the Sudras, whose duty it was to cultivate the land, to develop the resources of the country and also to practise the numerous arts of life.

2. Now, as regards the non-Brahmins, these consisted of a number of distinct classes of workmen representing almost every species of industry, the weavers, the masons, the goldsmiths, carpenters, potters, fishermen, fowlers, shepherds and the like. As each person had a special liking for the calling of his ancestors, he was contented and never envied his neighbours whose trade happened to be more lucrative. The only competition was

from his own fellow workmen in the same calling. These being comparatively few, the competition was a healthy one. Every section of the society therefore rested for support upon every other section; and there being no abnormal or undue inclination on any one side, the structure formed a symmetrically compact system, and there was no fear that any portion would at any time grow weak or dis-appear. This being the case, the country was able to boast of men of superior skill in arts, in all parts of the land. Accordingly, we read "Europe and America recognise the artistic skill of the goldsmiths and silver-smiths of India, that of ivory carvers of Travancore, the enamellers of Jeypore, the Kaftagari inlayers of the Punjab and the Tutangue inlayers of Bedar. The pith models of Madura are much admired as likewise have been the horn and woodwork armour, horse and elephant trappings of India." Again, the author of the Periplus enumerates a great variety of cotton fabrics, among Indian exports. Marco Polo dwells upon the cotton and the buckram of Cambay. But the productions of the hand-looms of to-day are undersold by the machine-made fabrics of Europe and India has now to import Rs. 248,100,625 worth of cotton goods, but yet holds its own in the finer artistic work of its mushroo and kinkhab, its satins and brocades of Ahmedabad and Benares and its delicate muslins of Dacca and North Arcot. The shawls of Kashmir and the Punjab have no rival

and the Rampur chadars from the Himalayas are to be purchased in the fashionable shops of London. A chadar or shawl made by the order of a late Gaekwar was composed entirely of inwrought pearls and precious stones disposed in an arabesque fashion and was said to have cost a crore of Rupees. When spread out in the sun, it seemed suffused with an iridescent bloom as grateful to the eye as were the exquisite forms of its arabesques. Again "the methods of working gold, now lost in Europe are still in full use in parts of India, particularly that of fretting gold by soldering fine spines or hairs of gold wire as delicate, in fact, as thistle-down, yet done by unscientific workmen possessed of certain chemical secrets which they put into practice by traditional usages" We will give one more quotation. "For translucent enamels, that is enamel colours painted on gold or gold leaf, which gives light and splendour to the colours, Jeypore is the best school."

3. Such vast skill in so many arts of life, could not have been acquired, if the father had pursued one trade, the son another, and the grandson a third. Each family firmly convinced, that their only source of income was the trade of their forefathers employed all theit energy and ingenuity in developing it. But all this, has changed. How? The income from the industries could not have been very great, certainly not as high as the salaries of hundreds of well-paid officers of Government, ranging from Rs. 500 to Rs. 1000 or more a month. This is a glori-

ous life, if it could be secured. When they find the children of some of their poor neighbours rise to a position of power and affluence after a few years' study in a school, the whole country naturally thirsts for such a life of splendour, and all parents send their children to English Schools to the neglect of the arts of their forefathers. The high and the low, the rich and the poor, the priest and the peasant are all now found to run the same race.

"When Adam delved and Eve span,

Who was then the gentleman?"

appears more to be the cry now than it was in the time of the King, Richard II.

4. In 1881, there were 79,953 institutions for boys and 2590, for girls with 2,195,614 scholars of whom 120,365 were females. We will now examine the character of the education now imparted to our youths. It is clear that no moral education of any sort is given in our schools, as they are conducted at present. The Government of India have recently complained of this. This defect of moral education becomes painfully illustrated when so many learned men in high authority are brought under the clutches of the law for derelictions of duty. As regards intellectual education, the greater part of it is more a luxury of the mind which ought to be properly courted only by a few in the land and will be of no practical help to a man in his every day life. Reading, writing and arithmetic are all that are of

much practical use and instruction in these was imparted to every Hindu student irrespective of his rank in society, in almost every village school. If by education be meant that which makes men godfearing and inclines them to observe the duties of life as prescribed by the wise sages of the former days, such education our men have had, though not always from books, but from the more impressive lectures of their elders and these have been found to lead a more pious life than many a learned person in the exercise of power and authority.

5. Now the loss to the industries of the country during the last 40 years may well be attributed to the neglect of indigenous industries. The following figures speak for themselves :—

IMPORTS.

	1839–40.	1881–82.
Cotton twist, yarn and manufactures ...	£ 2,660,000	23,990,000
Other articles ...	3,170,000	25,120,000
Treasure ...	1,950,000	11,320,000
Total ...	7,780,000	60,430,000

EXPORTS.

Raw Cotton ...	£ 1,920,000	14,940,000
Opium ...	1,210,000	12,430,000
Grain of all sorts ...	670,000	17,510,000
Other articles ...	8,800,000	37,080,000
Treasure ...	570,000	1,100,000
	13,170,000	83,060,000

Cotton being the main article of commerce, it would appear from the above that £13,000,000 or nearly 20 crores of Rupees worth of cotton every year has ceased to be worked in India and are exported to England when compared with the state of things, nearly 40 years ago. As regards the other articles of import, we have to look up at present to England even for such things as, iron screws, pens, penknives, pencils, needles, threads and the like. If matters are not mended early, the future is sad to contemplate; and we apprehend in the course of 50 years and more the dependency of India upon England for almost every article of comfort and necessity would become wholly complete. How then is society benefited, if the majority of its children quitting their family trade wish to rule over their brethren? The happiness of a nation depends, not upon there being manufactured for the public service thousands of the children of the soil every year but upon their being an infinite variety of arts each well cultivated to the comfort of the entire community. The Government now see the evil and not knowing the cause cry out for the necessity of technical education. This only proves the truth of our complaint. But the means proposed to secure technical education are inefficient. Technical education will take care of itself, if the young men, belonging to the numerous industrial classes of the community the turn their attention to trade and industry rather than to the public service. If this is not done, we fear

that the destruction of Indian industries, which is now going on steadily will become complete in about half a century.

6. As regards the priestly caste, these too forgetting their importance and the duties they owe to the society join the rest of the community in seeking after English education to the neglect of the study of the Vedas and the Sastras which made their ancestors so great and noble. Who are the Brahmins? Here is the verdict of foreign travellers. "The Brahmins of the present day are a race of the highest culture, the result of 3,000 years of the hereditary education and self-restraint and they have evolved a type of mankind quite distinct from the surrounding population. Even the passing traveller in India marks them out alike from the bronze-cheeked, large limbed, leisure-loving Rajput or warrior caste of Aryan descent and from the dark-skinned, flat-nosed, thick-lipped low-castes of non-Aryan origin with their short bodies and bullet heads. The bulk of the Brahmins stands apart from both, tall and slim with finely modelled lips and nose, fair complexion, high forehead, and slightly cocoanut-shaped skull—the man of self-centred refinement. He is an example of a class becoming the ruling power in a country not by force of arms, but by the vigour of hereditary culture and temperance. One race has swept across India after another, dynasties have risen and fallen, religions have spread themselves over the land and disappeared.

But since the dawn of History, the Brahmin has calmly ruled, swaying the minds, and receiving the homage of the people, and accepted by foreign nations, as the highest type of Indian mankind.".

7. The Brahmins have been all these, for are they not the sons of such intellectual giants as Angiras, Jamadagni, Vasishta, Kasyapa, Bhrighu, Atreya, Goutama, Sankhya, Pulastya, Vamadeva, Asvalayana, Bharadwaja, Koundinya, Badarayana, Katyayana, Marichi, Sounaka, and the like, dreaded and revered by kings? The Brahmins had education of their own, not a whit inferior, to the present English education both intellectually and morally, and we read "During Hindu and Mahomedan supremacy except in a few rare places, the education of the subjects was left to the benevolent efforts of learned men who taught gratuitously such pupils as sought instruction, and this practice is continued even to the present time." Nevertheless, the education given to the pupils in the higher parts of literature was really deep. Each teacher having only less than a dozen students under him for a period of 10 or 12 years finds it easier to note and correct the ignorance of each than a teacher of an English school of the present day with so many as 40 or 50 boys whom he changes every year as one would change his clothes. The result is that the students though few in number, became one and all, learned men of eminence. They maintained the literary reputation of the land. The Miltons, the Newtons and the Shakes-

peares of a country are not, of course, being repeated often, nevertheless, the literary reputation of the land is wholly due to these few men. The native method of teaching is far superior to the modern western method as will be seen from the results. The knowledge of Sanskrit, for example, possessed by a B.A. or even an M.A. of the present day, is not one-tenth as deep as that of a Sanskrit student who has received his education after the native fashion. Who does not know this? Now, have these 80,000 schools with their 2,000,000 pupils ever been able to produce students, as learned, as some of our learned men of former days?

8. The glories of the public service appear dazzling in the eyes of the priest, and he too sends his sons to English Schools where they receive instruction and pass the examinations in due course and enter the public service. Thus, while the weaver lays aside his shuttle, the painter his pencil, the tiller his plough, the tailor his needle, and the wood-cutter his axe, the purohit too lays aside his *Kusa-grass* and *palasa twigs* for the simple goose's quill. What a change has been wrought! In the celebrated Austrian lottery, the chances of winning the first one or two prizes are one or two in 60,000, and yet men rush to it and pay off their amount each hoping to get the prize. More so, with respect to Government appointments. The prizes here are numerous and the people therefore continue to rush to public service,

"Like to the Pontic sea,

MAHAMAHOPADHYAYA ... LIBRARY

Whose icy current and compulsive course

Ne'er feels retiring ebb, but keeps due on

To the Propontic and the Hellespont."

Though difficulties are now being felt in securing Government appointments, what shadow of reasonable hope is there that the thirst for public service will receive any perceptible check for years to come?

When the son of a Purohit enters the public service, the Purohit father gives up his profession; and thus, the present generation is sustaining a double loss—the loss of the father's service and that of the service of his sons. As regards the future generations, their condition is one of blank dismay. The purohit market which is daily becoming thinner will, we apprehend become empty in the course of 50 years if matters are not mended. Hinduism unlike other religions, rests upon too firm a basis to be shaken off easily. Though the spirit may have gone the form will continue for a few centuries at least, and the Hindus will continue to require priests to help them in the observance of the more important ceremonies. Of course, when the supply of men for the public service far exceeds the demand, there will commence a re-action—it will take years in the history of a nation before such reaction begins to bear fruit—which will tend to the restoration to the old state of things of the social equilibrium so wisely secured by the wisdom of the Indian sages.

Aryan Miscellany Office,
Madura,
9th September 1888.

N. CHIDAMBARAM IYER.

ഉ

கடவுள் துணை.

சாத்துகவிகள்.

ப்ரஸித்த ஸங்கீத வித்வானாய் விளங்கிய
மஹா வைத்தியநாதையர் அவர்களின் தமையனாகிய

வையை - இராமசாமி ஐயர்

இயற்றியது.

விருத்தம்.

குஞ்சிதம் பாசிடப் பதங்காங் கொளுங்
குழகனைக் குறித் தேத்து
நஞ்சிதம்பரமறையவன்புகன்றனன்
நம்மவர் நூற்றெட்டாய்த்
திஞ்சிதம்பர மறிவிலார்க் கம்பர
வின்னமு தறிஞர்க்காய்
நெஞ்சிதம்பரவச் செயுமூவர்தந்
நிலைசெய லறிவித்தே.

திருநயம் - வைத்தியநாத பாரதியார்

இயற்றியது.

விருத்தம்.

அரிய வராக மிகிரனார் தேவ பாடையி லன்றினி தமைத்த, பெரியசங் கிதையைப் பெரியசா தகத்தைப் பேர் கொளாங் கிலேயபா டையிற்றேரும், இரியநன் குரைத்த சிதம்பரச் சுகுணன் இலகுநம் மவர்களூற் றெட்டைப், பிரியநன் னடையி லந்தணர் தெரியப் பேசினன் காசினி தனிலே. (க)

லௌகிகர் வைதிகர் நடுவ ராமிவர்
செய்தவ றுலகுளோர் தெரியச் செப்பினன்.
பொய்கலந் திராதநெஞ் சுள்ள பூசுரன்
செய்கையில் நலனுடைச் சிதம்ப ரையனே. (உ)

மசூலீபட்டணம்

ஹிந்து ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயரும் "பகவத்கீதை வெண்பா" இயற்றியவருமாகிய

திருநயம் - முத்து பாரதியார். B.A.

இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

காரிருக்கு மிரும்பொழிலுட் கலந்திருக்கு மயிலினங்கள் களிக்குமாவிண், டேரிருக்கு மருங்குணத்தி னுறைவிருக்குஞ் சிதம்பரப்பே ருரவோ னீந்த, சீரிருக்குஞ் செழுந்தமிழிற் சிறந்திருக்கும் பொருளுகந்து சிந்தை கூருர், பாரிருக்கும் புலவர்களுட் பயனிருக்கும் படியறிவார் பகரின் யாரே. (க)

அறநெறியுந் தவநெறியு மாருயிர்போ னம்மவர் முன் னன்பி னேம்பும், மறைநெறியு மறவிழந்து மறுமைவரு பயன்மறந்த மாக்க டேர்ந்து, பிறநெறியு ளுழலாது பிழைத் திடவிங் களித்தவெழில் பிறங்கு பாடல், திறனுறுநம் மவர் நூற்றெட் டினையறிவார் தாமன்றே செயிரிற் றீர்ந்தார். (உ)

மாசறு கல்வி யென்னு மதியினல் விளங்கு மெய்ம்மைத்
தேசுறு சிந்தை யாளன் சிதம்பர வள்ளல் சொற்ற
ஆசறுகவிதை நூற்றெட் டாமிவை யறிய வல்லார்
காசறு மனத்த ராகிக் கவினுறல் திண்ண மாமே. (ங)

சாத்துகவிகள் முற்றிற்று.

கடவுள் துணை.

நம்மவர் நூற்றெட்டு.

காப்பு.

நாலொன்பான் லௌகிகர்க்கும் நாலொன்பான் வைதிகர்க்கும்
நாலொன்பான் க்ராம நடுவருக்கும்—நூலொன்றில்
நம்மவர்நூற் றெட்டென்று நான்புகல வான்புகழூங்
கைம்மலேமு கக்கடவுள் காப்பு.

மூவர் வணக்கம்.

கள்ளுண்ட வாயுங் சரத்திற் கொறடாவுந்
தள்ளுண்டு பாலைத் தருவாயில்—வில்வண்டி
போவரே பூட்சுசிராய் பூண்டந்த லௌகிகத்
தேவரே யெங்கட்குத் திக்கு. (க)

பூட்சு—Boots.

வடையுண்ட வாயும் வலக்கையிற் புல்லுந்
தொடையண்டை சோமனுந் தொங்க—கடுவெயிலிற்
போவரூ ரூராய்ப் புகுந்தேகும் வைதிகத்
தேவரே யெங்கட்குத் திக்கு. (உ)

கையிற் றடியுங் கடிக்கும் புகையிலையும்
மெய்யில்துப் பட்டியும் மேல்வீசி—மையிருளிற்
போவரே புன்செய் புகுவர் கிராமத்துத்
தேவரே யெங்கட்குத் திக்கு. (ங)

I. லௌகிகர்.

க. வீணர்.

ஆரணங்க ளோதி யருணோ தயந்துவக்கில்
நாரணனென்றுள் சற்றும் நமஸ்கரியார்—தாரணியிற்
கையிரண்டு மூன்றித்தங் காலின் விரலூன்றி
மெய்புரட்டு வாரே வியர்த்து. (க)

கையிற் றடுப்புங் கழுத்திலே காலருடன்
வெய்யிற் படுமுன் வெளியேகி—மெய்யையே
அந்தமாய் மூடி யரையிலே பெல்டணிந்து
பந்தடிக்கப் போகிறூர் பார். (உ)

காலர் (Collar)-கழுத்துப்பட்டை. பெல்ட்–Belt

மீசை பிடிவைத்தும் மேல்வளரக் கத்தரித்தும்
ஆசையுடன் கண்ணுடி யான்மகிழ்ந்துங்—கேசமதிற்
சம்பங்கி பூசியுந் தம்மழகைத் தாமுவந்து
வம்பெங் கெனப்போகு வார். (ங)

நீர்முழு கார் நெற்றியிலே நீலக் குறியிடுவார்
மார்பணிவார் மஞ்சள் மகிழ்ந்துமே—தாரணியிற்
பூசியே நீறு புலித்தோலே மேற்போர்த்து
வாசியிழுத் தோர்மக்கண் மார். (ச)

[வாசி–சுவாசம்; வாசி யிழுத்தல்–பிராணுயாமம் செய்தல்]

'ஹரி,'யென்றூல் 'ஐஸே ஹலோ'வென்பர் 'ஆமா
ஸரி'யென்றூல், 'ஆல்ரைட் ஸ'ரென்பர்—'வெரிவெல்நௌ
ஹௌடுயுடு' வென்பர் அவர்கை குலுக்கியே
மௌடியமாய்த் தம்முள் மகிழ்ந்து. (ரு)

[ஐஸேஹலோ-I Say, Hallo ! ஆல்ரைட்சர்-All right, sir. வெரிவெல்நௌ ஹௌடுயுடு-Very well, now; how do you do ?

பாத்திரநீர் பற்றூர் பலாசைப் பரிசியார்
வாத்திறகைக் கையில் வகிப்பரே—நேற்றிரவில்
உண்டவூ ணுண்பர் உடுத்த் வுடையுடுப்பர்
சண்டம் வரைக்குளிப்பர் காண். (சு)

I. லௌகிகர்.

உ. சாருவாகர். *

அறிவோர் துருவ மறியாமை யொன்றுப்
முறையே பிரமம் விரிவாம்—நெறியே
தவறென் றணுத்திரளின் சம்யோகமென்பர்
இவரோ வுலகின் இயல்பு. (க)

குரங்கா யிருந்துபின் குண்டியே தேப
வருங்கான் மனிதராம் மண்மேற்—குரங்கின்பின்
வால்பிறந்த வாற்றின் வகைபுரைபா னேடார்வின்
தோல்தேய்ந்த தைச்சொன்ன தோடு. (உ)

டார்வின்—ஒரு ஆங்கில நிபுணர்.

தேகந் தொலையவே சீவன் தொலையுமிவை
போகுமுன் இங்கே புசித்ததே—போகமாம்
கண்டதே காட்சியாங் காலத்தில் வாய்க்கினிதை
யுண்டதே யென்பர் உணவு. (ங)

ஈசருரை யீதென் றெடுத்துரையா ரேவேத
வ்யாசருரை யீதாய் வ்பவகரியார்—கூசியே
ஸ்பென்சர் உரைத்தனவும் பேகன் பகர்ந்தனவும்
இன்சொலாய்க் கொண்டிடுவ ரே. (ச)

ஸ்பென்சர், பேகன்-ஆங்கில தத்துவ சாஸ்திரிகள்.

பிறலோக மொவ்வார் பிறப்பில்லை யென்பார்
மறையோதுங் கொள்கை மறுப்பார்—நெறியிலே
நில்லார் விரும்பி நினைத்தபடி யேசெய்வார்
கல்லார்நம் நூலொன்றுங் காண். (ரு)

வேதமே யோதார் விரிந்த மறைநூலின்
நாதமே கேட்கில் நகைப்பரே—பேதமே
வந்தோரைப் போல வழக்குரைப்ப ரேஜன்மந்
தந்தோரை நிந்திப்பர் தாம். (சு)

---

* சாருவாகர்—பிரத்தியக்ஷப்பிரமாணம் ஒன்றையே உண்மை யெனக் கொள்பவர்.

I லௌகிகர்.

க. குடிகேடர்.

மூந்நூறும் நானூறும் முற்றிலுமே போதாமல்
ஐந்நூ றறுநூறுக் காசிப்பர்—பின்னர்
அகப்பட்டு வேலை யிழப்பரே அந்தோ
சுகப்பட்ட தேயுறுதி தான். (க)

சொல்லொன்று சொல்லத் துணிந்தோன் றெழுதியே
பல்லொன்ற மோதிப் பயங்காட்டி—வெல்லும்
வழக்கைக் கெடுப்பர் வரிந்தே புளுகிக்
குழிக்குள் குடிமூழ்கக் கொண்டு. (உ)

இருட்டிற் பிறர்சுவர் ஏறிக் குதித்த
திருட்டுக்குச் சிக்ஷிப்போ மென்றே—உருட்டியே
பட்டப் பகலிற் பறிப்பரே யப்பொருளைச்
சட்டத் துதவியினாற் றான். (ங)

ஆயிரமே வாங்கி யழவே வழக்கிழந்தோர்
வாயிலே மண்போட்டு வைரத்தைத்—தேயப்
பொடிசெய்து தம்வாயிற் போட்டிறப்பர் இந்தக்
குடிகேடர் மானங்கைக் கொண்டு. (ச)

சத்திரத்தைச் சாத்தித் தடாகத்தை யேதூர்த்து
வைத்திருக்கு நற்பொருளை வாரியே—எத்திசையும்
ஊணர் கலைகளையே யூட்டுதற்குக் கல்லூரி
வீணர் திறப்பர் வியந்து. (ரு)

திண்ணை யிடித்துந் தெருவிற் சுவர்வைத்தும்
புண்படவே பீங்கான் புதைத்துமே—நண்ணுவரை
வேகத் துடன்பிடுங்க வேட்டைநாய் வைப்பதுத்தி-
யோகக் குறியென் றுணர். (சு)

I. லௌகிகர்.

ச. பதிதர். *

ஞாயத் திரிசபியார் காலத்திற் றீவணங்கார்
மாயக் குடியின் மயங்குவார்—காயத்-
திரியினு லொன்றுமிலை தேகத்திற் கோம
எரியினுற் சூடென்ப ரே. (க)

சாதிமுறை விட்டுணைச் சாப்பிட்டே அந்தணர்கள்
ஏதிலரைப் போலுடுப்ப ரேயறிவு—பேதித்துக்
கைம்பெண் மணப்பர் கருதி மிகமுயன்று
பைம்பொன் குவிப்பர் பரிந்து. (உ)

ஓமென் னுரையால் ஒழியாப் பெருங்கன்மம்
போமென் னுரையையே பொய்யென்பர்—ஏமென்
பதமுடிவு கொண்ட பரசமய வாக்கே
பதமுடிவா மென்பர் பரிந்து. (ந)

ஏமென்—Amen

அத்திரியின் புத்திரரும் ஆங்கிரசின் புத்திரருஞ்
சித்தமொப்பிச் சர்மா திருத்தியே—மத்தேயு
அந்தோணி வில்லியம் ஆர்தர் எனச்சொல்லித்
தந்தம் மதம்விடுவர் தாம். (ச)

மத்......தர். Mathew, Antony, William, Arthur.

அறத்தினுக் கீயார் அருந்தவத்தோர்க் கீயார்
மறத்தினுக்கே யீவரிம் மண்மேல்—சிறுத்த
இனத்தோர்க்கு மீயார் இடைபிடித்தே யாடுந்
தனத்தோர்க்கே யீவார் தனம். (ரு)

கலைமகளை நாடிக் கதிபெற்றோ ரெச்சம்
விலைமகளை நாடி விழுகின்றார் - தலைமகளைத்
தள்ளுவரே மானந் தயையைத் துடைத்தவரை
யுள்ளுவரே யுள்ளம் உழன்று. (சு)

---

*பதிதர் — வர்ண ஒழுக்கத்தில் தவறினோர்.

I. லௌகிகர்.

ரு. புலையர்.

கதவை யடைப்பர் கனத்தோ ரிரக்கில்
இதமாகி யூணர்க் கிசைந்து—கொதுவையே
வைத்தேனும் ஐந்து வதைத்தேனுந் தம்முடைமை
விற்றேனுஞ் செய்வர் விருந்து. (க)

சங்க மொழித்துத் தவமியற்றித் தம்பெருமை
பங்க மகற்றியே பாலித்தோர்—பொங்கும்
மறையோது மந்தணர்தம் மக்களோ அந்தோ
பறையோர் பிணமறுப்பர் பார். (உ)

குடந்தையிலோர் பார்ப்பான் குடித்துக் குதித்துத்
தடந்தோளிற் றுப்பாக்கி தாங்கிப்—படர்ந்ததம்
பக்ஷம் பரப்பிப் பரிவாரத் தோடேகும்
பக்ஷிசுடச் சென்றான் பரிந்து. (ங)

தோல்வாரிற் றெங்குஞ் சுடுமருந்தைத் தந்தோளில்
நூல்போ லணிந்தேபுள் நோக்குவரே—மேலான
நிஷ்டையிலே நின்று நிருவிகற்ப மாய்யோக
சிஷ்டர்தம் வம்சத்தார் தேர்ந்து. (ச)

நாகையிலே தங்கி நகரிற் புகுந்தியாம்
போகையிலே கண்ட புதுமைகேள்—நாகைப்
பறையர் சமைத்த பசுவைநா லைந்து
மறையோர் புசித்தார் மகிழ்ந்து. (ரு)

முக்காற் புகைமுறையே மூட்டுமுனி வோர்தனயர்
உக்காப் புகைமுறையே யூதுவார்—எக்காலுங்
கள்ளுங் குடிப்பர் சனத்தவுண் தின்பரே
பள்ளும் பறையோடு மொத்து. (சா)

———

I. லெளகிகர்.

சு. குடியர்.

புகைவண்டி யேறிநாம் போகையிலே கண்டோம்
மிகஉண்டு விந்தை விளம்ப—அகமகிழ்ந்து
பல்லிற் சுருட்டிடுக்கி 'பாய்ப்ரிங்வைன்' என்பரோ
சொல்லிற் றிரிந்து சுகித்து. (க)
பாய்......ன்—Boy, bring wine

சோமங் குடியார் துறக்கவின் பந்தோயார்
காமம் விரும்பியே கள்ளுண்பார்—ஓம
முகத்திநெய் சிந்தார் முதியோரை யோம்பார்
மகத்தினை முற்றும் மறுத்து. (உ)

குப்பிக் கழுத்தைக் குறைத்துடைத்து மேல்வாயாற்
சப்பிக் குடித்துத் தடுமாறித்—தப்பிவந்த
வேதியரைச் சீறி வெகுண்டே வெருட்டுவர்
பாதியுடை பின்புரளப் பாய்ந்து. (ந)

குடித்தே சபைபுகுவர் கோத்திரமற் றோர்கை
பிடித்துக் குலுக்கியே பின்னுந்—தடித்ததம்
நாக்குத் திருத்தி நகைப்பர் 'ஐ கன்கரெ'ன்பர்
மூக்குப் பொடியை முகர்ந்து (ச)
ஐ கன்கர்—I Concur

கோட்டோ டிருகுதிரைக் கோச்சேறி யேபயிண்டு
போர்ட்டுண்ட வாயிற் புகையூட்டிச்—சாட்டைதனைத்
தந்திரமா யேந்திபிவர் சந்துவிடச் சந்திரனோ
டிந்திரனும் முந்தியிரா ரே. (ரு)
பயிண்டு போர்ட்—Pint Port

பத்தி யிழந்தோம் பரகதியைத் தானிழந்தோஞ்
சித்தி யிழந்தோம் திறமிழந்தோம்—இத்தனையும்
ஆடையா சாரம் அனைத்திலும் வேறுவோர்
பாடையா லானதே பார். (சு)

II. நடுவர்.

க. பயிரிடுவோர்.

வெள்ளி யெழுமுன்னே விழித்தே யெழுந்துமே
பள்ளத் தெருவிற்குப் பக்கத்தில்—தள்ளுண்டு
போவாரே புன்செயுழப் போடா வ! பூனேமுழி
ஏவாரா வென்பர் இரைந்து. (க)

அழுத்தியுழச் சொன்னல் அடியாழம் பாய்த்துக்
கொழுத்தினிதாய்க் குந்துகிறு யென்ன!—கழுத்தை
இழுத்தெருதை யோட்டடா விங்ஙனமே யென்று
கொழுத்தள்ளுவாரேகைக் கொண்டு. (உ)

மோட்டை யடையடா முந்திநீர் பாய்ச்சடா
காட்டை யழியடா கட்டாரி—வீட்டின்
கடையெருவை நானே கழித்துத் தாநீ
அடியிருளா வண்டை வபற்கு. (ங)

மணிக்குப் பிடிபாக்கும் வாயி லடக்கத்
துணித்த புகையிலையுஞ் சோல்நா—திணித்தேகி
மண்வெட்டி யேந்தி வடிகால் அடைப்பரே
கண்பட்டுப் போஞ்சூட்டிற் காய்ந்து. (ச)

சோல்நா—பை.

அடியிற் கதிரை யறுடா வடடா
மடியிற் கதிரை மறைத்தாள்—குடிகேடி
சேலேவாய்த் தானியத்தைச் சிந்துவார் தந்தடிபால்
கூலிவாய் மண்ணென்று கொண்டு. (ரு)

கோட்டுக்கு நான்கு கொடடாபோர் நெல்லேநீ
வீட்டுக்குக் கொள்ள விரும்பாதே—கோட்டை
எறியடா விங்கே யிரண்டுமுறை குத்திக்
குறியடா போர்போடக் கொண்டு. (சு)

II. நடுவர்.

உ. பயிரிடுவோர் வருந்தல்.

கட்டி யளந்து கசந்துதர வேண்டாமிப்
பொட்டைக்கா லெங்கே பொறுக்கினீர்—இஷ்டம்
இருந்தா லிடுங்கூலி யீரல் பசியால்
வருந்தாது வாழ்த்துவோம் மற்று. (௧)

வெட்ப லழிந்ததே வெள்ளப்பா ழானதே
குப்பை யடித்துங் குணமிலையே-தப்பி
முளைத்த பயிரோ முழுக்கருக் காயே
தெளித்தநெல் வீணுயிற் றே. (௨)

தொண்டைக் கதிராய்த் துடிக்கிறதே சொற்பமழை
கண்டெத் தனைநாள் கழிந்ததே—அண்டைத்
தரையோ வெடித்ததே தண்ணீ ரிலையே
விரையோ வெகுநஷ் டமே. (௩)

சுற்றி யுழைத்துஞ் சுகமிலையே துட்டளவு
கிஸ்த்தி கொடுக்கக் கதியிலையே—ஜப்தி
கணக்கிற் பதிந்துநங் காளைகளைச் சொற்பப்
பணத்திற்கு விற்பர் பரிந்து. (௪)

எங்க்ரோச்சு மெண்டென்பர் எங்குங் கணக்கரோ
தங்கையிலே யள்ளித் தாவென்பர்—பங்குக்
கொருகலநெல் லென்பர் உளுந்தெள் துவரை
சருவமுமே யென்பர் தனித்து. (௫)

எங்க்ரோச்மெண்ட்—Encroachment புறம்போக்கிற் படுதல்.

நிலத்தை நத் தொலைக்கவே வேண்டும் நினைத்த
பலத்தை யடைவதோ பாழே—ஜலத்தையே
நத்தி யுழைத்து நலமிலையே நாம்பிழைக்க
எத்திக்கு மேகுவோ மே. (௬)

II. நடுவர்.

௩. பலதொழிலாளர்.

மைகூ ரடைவர் வகிப்பர் நடைநடையாய்க்
கைசோர நீர்க்குடக் காவடியைப்—பைசா
இரண்டுக்கு விற்பர் இரப்ப ரிடையே
திரண்டபொருள் சேரத் திரிந்து. (௧)

மலையாளம் போவர் மளிகைதொறுஞ் சென்று
தலையாலே மூட்டையைத் தாங்கித்—தொலைதூரங்
காட்டுக்கு ளேகியே கைக்கூலி வாங்குவர்
ஊட்டுப் புரையோடி யுண்டு. (௨)

சோறு சமைத்துத் துவைத்துத் தயிரோடு
கூறுசெய்தே யன்னத்தைக் கொண்டுபோய்—வேறு
கடையி லமைத்துக் கடலையுஞ் சுண்டி
வடையோடு விற்பர் மகிழ்ந்து. (௩)

சோற்றுக் கிரண்டணு தோசைக்கொன் றென்றெழுதிக்
காற்றுக் கெதிராகக் கட்டியே—போற்றி
வருவோரை வேண்டி வரிசைக்கு மேலே
தருவோர்தா தாவென்பர் தான். (௪)

பலசரக்கு விற்பரே பார்ப்பா ரிருகண்
துலைசரக் கேற்றிச் சுருக்கித்—தலமெங்கும்
மூக்குத்தூள் விற்பர் முறுக்கோடு விற்பரே
பாக்குப் புகையிலையும் பார். (௫)

கோவிற் புகுந்தங்கே குற்றேவல் செய்வர்
சாவிற் புகுந்து சமைப்பரே—சாவி
உடைசுற்றுந் தம்பிராற் கூழியமே செய்வர்
சடைசுற்றிச் சென்னியிலே தாம். (௬)

II. நடுவர்.

௪. புரட்டர்.

திட்டுக் கிரண்டுபோய் சொல்வரே மெய்யையே
மட்டுக்கு மேலே மறைப்பரே—தெட்டித்
தனஞ்சேர்ப்பரே அயற் றையற் களிப்பர்
இனஞ்சேர்ந்து துஷ்டர் இசைந்து. (௧)

முத்திரை போலே முடித்தே புகையூட்டிப்
பத்திர மொன்று பரிந்தெழுதிச்—செத்தோர்
பெயரெலாங் கண்டு பிறருடைமை கொள்ள
முயலுவார் முன்வருணத் தார். (௨)

அடிவைத்தா னென்றெழுது மையா வெனவே
பொடிவைத்தேன் பாரென்பர் பொய்யைப்—படிசேர்த்
தடித்தான் பொருள்பறித்தான் ஆணையிட்டான் வைதான்
கடித்தா னெனையென்று கண்டு. (௩)

கூடோ டொருகுடிப்பங் குன்றவே பொய்வழக்கை
யேடோ டெளிதா யிசைத்துமே—மேடோவர்
கொள்ளுவரே மூன்றுமுறை கோர்ட்டேறி யேபலரைத்
தள்ளுவரே தீக்குழியிற் றான். (௪)

தைத்த வுடையைத் தரித்தோர் தமைநம்பி
வைத்த பொருளைத்தாம் வஞ்சித்தே—மெத்தப்
பயிரிடுவ ரில்லம் படைப்பர் சுகித்து
வயிறு வளர்ப்பர் மகிழ்ந்து. (௫)

ஆபத்துக் கென்றே யழுது பொருள்வாங்கித்
தாபத்தைத் தீர்த்ததைப்பின் தாராதப்—பாபத்து
காலா வதியாற் கழிந்ததே யென்றுரைப்பர்
மேலாம்நீ தித்தலத்து மே. (௬)

II. நடுவர்.

ரு. தப்புநடையர்.

பழஞ்சோ றுடனே பரிந்தே பருகுங்
குழம்பைக் கறியோடு கூட்டிக்—கழிந்தநாள்
முப்பதுக்கு மேலேதீ மூட்டி யெரித்துமனம்
ஒப்பியவர் உண்பர் உவந்து. (க)

மூக்குப் பொடியும் முழநீளக் கோவணமும்
நாக்குத் தெரிய நகைத்தொனியும்—வாக்குக்
கிழுக்கான சொல்லும் இளைஞருடன் நட்பும்
அழுக்கான மேனி யவர்க்கு. (உ)

சங்கேத மான தலத்திற் சயனிப்பர்
அங்கே யவர்க்குத் துணையாகத்—தங்கி
யிரவே யிருந்தெழுந் தில்லமே போவர்
பரவே சையர்பாற் பரிந்து. (ந)

வெள்ளிக் கிழமைபடா வேசாமி யென்றழைத்தே
பிள்ளைக் கருகேபோய்ப் பெண்டாட்டி—பள்ளிக்கு
வாடா வெனவிரும்பும் மாதாவைத் திண்ணை திண்ணை
தேடாதே போவென்பர் தேர்ந்து (ச)

மந்திர மெல்லாம் மறந்தனரே மற்றுள்ள
தந்திர மெல்லாந் தவிர்ந்தனரே—சந்திச்
சடங்கோடு தர்ப்பணஞ் செய்திலரே பூணூல்
வடம்பூண்ட நாண்முதல் மற்று. (ரு)

வாயி லிடுவரே வானோ ரவிசைமுன்
தீயி லிடுவர் தெளிந்துபின்—தீயை
ஜலத்தா லவித்துச் சடங்கைத் தொலைத்து
மலைத்தே விழிப்பர் மருண்டு. (சு)

II. நடுவர்.

௬. நடுவர் தம்மக்கள் இங்கிலீஷ் கற்கத் துணிதல்.

காலத்திற் கிஸ்தி கழிக்கத் தவறவே
ஏலத்தின் மாசூ லெடுத்தனரே—ஞாலத்தில்
பள்ளுப் பறையோ டுழைத்தோமே பாழில்நம்
பிள்ளைக்கேன் இந்தப் பிழைப்பு. (௧)

கால்தேய வோடினேங் கைதேய வேயுழைத்தோந்
தோல்தேய மூட்டை சுமந்தோமே—நூல்தேய
வெள்ளைத் துணியொன்றே வேனிற்குளிர்க்குநம்
பிள்ளைக்கேன் இந்தப் பிழைப்பு. (௨)

எழுத்துப் புரட்டரா யேற்பட்ட பேரை
இழுத்துச் சயிலுச்கு ளேயே—கழுத்தைமுன்
தள்ளி யடைத்துச் சவுக்கா லடித்தனர்நம்
பிள்ளைக்கேன் இந்தப் பிழைப்பு. (௩)

சூத்திரரின் மக்கள் துரையாகவே யேழைச்
சாத்திரியின் மக்களோ ஜட்ஜானர்—ஆஸ்தியை
விற்றுவிட்டு நம்மக்கள் பேனுட்டுக் கல்வியைக்
கற்றுவிட வேண்டுமே காண். (௪)

உண்டைச்சோ றுண்டோர் உறங்கத் தலமற்றோர்
துண்டத்தோ டோடித் துயருற்றோர்—கண்டக்கால்
டேசுவரோ தப்பிள்ளை பி. ஏ. பரீக்ஷையாய்த்
தாசிலிலே போனபின்பு தான். (௫)

வேதந் தனைமறக்க வேதியர்கள் மும்மாரி
மாதம் பொழிந்திடுமிவ் வானமே—சேதம்
விளைக்குஞ் சொரிந்தொருகால் வீணிற் பயிர்க்குச்
சளைக்கும் வரண்டொருகாற் றான். (௬)

III. வைதிகர்.

க. சூத்திரபுரோகிதர்.

சூத்திரர்க்கு வேதச் சுருதியுப தேசிக்கச்
சாத்திரமு முண்டென்று சாதிப்பார்—கோத்திரமுந்
தந்துமே பூணூல் தரிக்கப் புகட்டிவைப்பார்
சந்தியா வந்தனமுந் தான். (க)

கோமுட் டியரே குலவை சியராவீர்
நீமுத் திரையுந் திருமண்ணும்—நாமுமக்குத்
தந்தப்பங் காராப் சமைத்துமே கொண்டிடுவோம்
பந்திப் புசிப்பும் பரிந்து. (உ)

சோமுசெட்டி யன்னை தொலைந்தநா ளின்றிதுவே
வீமுசெட்டி யப்பன் விழுந்தநாள்—சாமுசெட்டி
பெண்டாட்டி சிவன் பிரிந்தநா ளெங்கட்குக்
கொண்டாட்ட மின்றல்லோ கூறு. (ங)

செட்டியார் கன்னி தெருண்டநாள் தீதாமி
ரட்டைபா லூறுபொன் னீவரே—கெட்டியாய்ச்
சாந்திக்கு மோமச் சடங்குக்கு மேதனம்
ஈந்துவிடு மென்போம் இசைந்து. (ச)

தோலடிப் போரே தொடைதட்டு வோரேநுங்
காலடிக்குண் மோக்ஷத்தைக் காட்டுகிறோம்—பாலடிசில்
தானங்கள் செய்வீர் தருமங்க ளோடுவெகு-
மானங்கள் வேதியர்க்கு மற்று. (ரு)

இரண்டுநாள் முன்னே யிருளாண்டி யன்னை
உருண்டநா ளோகோ மறந்தோம்—திரண்டுளவே
பத்துநா ளைக்குப் பலவேலை பின்னுளைச்
செத்தநா ளாயுரைப்போந் தேர்ந்து. (சு)

———

III. வைதிகர்.

உ. சாமான்ய வைதிகர்.

கோதானங் கொள்வர் குருகுலத்து வேதியர்கள்
பூதானங் கொள்வரே பூசுரர்கள்—தீதான
பஞ்சமா பாபம் பலநீங்கு மென்பரே
எஞ்சாம லீவாரை யேய்த்து. (க)

திப்பைய ரில்லிற் றிதியாகு மின்றுநா
ளுப்பைய ரில்லி லுபநயனம்—இப்பொழுதே
போகுவோந் தக்ஷிணையும் போஜனமுந் துண்டுங்கொண்
டேகுவோ மில்லுக்கு யாம். (உ)

செங்நெல் விளையூருந் தக்ஷிணையுந் தீக்ஷிதர்க்குப்
பொன்னுந் திருவில்லும் பூசுரர்க்குப்—பின்னுந்
தருகுவோ மென்கின்றாள் தப்படித்தாள் தாசி
இரகுபாய் செல்வோம் இசைந்து (ங)

முதுகாட்டுக் கம்மைபிணம் முன்றாக்கும் பார்ப்பார்க்
கெதுகேட்டா லுந்தருவோ மென்று—புதுவையிலே
சுப்பபிள்ளை தப்பிட்டுச் சொல்லுவதால் நாம்நால்வர்
இப்பொழுதே போவோம் இயைந்து. (ச)

பெண்ணுக்குக் கல்யாணஞ் செய்த பெருமையையிம்
மண்ணுக்குள் யார்தான் மகிழவில—வெண்ணிமுழத்
துண்டுண்டோ செல்லாத துட்டுண்டோ வேழைக்குத்
தண்டுண்டே யென்பர் சலித்து. (ரு)

திருமயிலைப் பொன்னன் தெடபுடலாம்; மைந்தன்
எருமைபொன் றின்றளிப் பானும்—இருநூறு
வெள்ளியே தக்ஷிணையாம் வெண்ணெய்ப் பிடிமாடாங்
கொள்ளுவோம் நாம்முந்திக் கொண்டு. (சா)

III. வைதிகர்.

௩. பிராமண புரோகிதர்.

இடித்தே புசிப்புண்பர் இல்லங்க டோறுந்
தடுத்துந் திதிபோ சனமே—அடுத்த
விருதினத்திற் கொள்வர் இருபுசிப்பு மன்றி
ஒருதினத்திற் கொள்வாரு முண்டு. (௧)

சூதகமே கொள்ளார் துணிந்தே சடங்குகளிற்
பாதகமே பாரார் படப்படார்—வேதமுறைப்
பூணூற் சடங்கிற் புகுந்தோமஞ் செய்வரே
வானோரே யாக மகிழ்ந்து. (௨)

மாதவிடா யானாள் மனையாள் அறியாமற்
காதவழி போவோங் கடுநடையாய்த்—தேதியூர்ச்
செல்லைய ரில்லிற் றிதியுண்போம் யாருக்குஞ்
சொல்லவே மாட்டோந் துணிந்து. (௩)

எனக்கு மொருபணமிவ் வேனவாய்ச் சுப்பன்
தனக்கு மொருபணமா தந்தீர்—எனக்கோ
இருபணமீ யென்பர் இருகை பரப்பித்
தெருநடுவிற் குந்தித் திகைத்து. (௪)

பையற் குபநயன மென்பர் பரிந்துதந்
தையற்குச் சேலைக்குந் தாவென்பர்—கையிலள்ளித்
தந்தோரை வஞ்சித்தோ மென்பர் தலைக்கடையில்
அந்தோ இவர்கள் அழிம்பு. (௫)

முழுகினல் மூக்கடைப்பு மூங்கிற் குடியார்
இழவுநா ளின்றன்றோ கைகால்—கழுவிநாம்
வெண்ணீறு பூசியே போவோம் விரனுனியில்
தண்ணீ ருடன்புசிக்கத் தான். (௬)

III. வைதிகர்.

ச. வைதிகர் வருந்தல்.

இந்நேர மேனுன்னை யேழடித்த போதுவரச்
சொன்னோமே சோமாசி சுந்தரமே—யுன்னாலே
கச்சேரி போசக் கடுநேர மாயிற்றே
எச்சரிக்க மாட்டோம் இனி. (க)

தருப்பை யெடுத்ததாற் ருமதமா யிற்றும்
விருப்பின் படியிசைய வேண்டி—இருட்டில்
விழித்தே யினிமூழ்கி வேலை முகட்டில்
எழும்போ திரவிவரு வேன். (உ)

மாண்டாரு மில்லை மணப்பாரு மின்றில்லை
பூண்டாரு மில்லை புதுவேஷம்—வேண்டாம்
உழைத்திச் சகம்பேசி யூரெலா மோடிப்
பிழைக்குமிவ் வீனப் பிழைப்பு. (ந)

புகையுண்டு போனவே புன்கண் ணிரண்டும்
மிகவெந்து போனதே மேனி—சுகமின்றி
வாயெல்லா நோவவே மந்த்ரஞ் சபிக்கநாம்
தீயினைய் சிந்தித் திகைத்து. (ச)

வேதங்க ளொன்கினையும் வேதாங்க மாறினையு
மோதியதா லென்ன வுணர்ந்தென்ன—சாதி
வரையின்றி நாமே வருந்தினதே போதும்
உருவின்றி யுண்ணு முணவு. (ரு)

முக்காற் பணத்திற்கே மூன்றியா மங்கதறி
எக்கா லு போடி யிரக்கிறோம்—வெட்கமின்றித்
தள்ளுண்டு சென்று தவிக்கிறோம் ஐயோநம்
பிள்ளைக்கு வேண்டாம் பிழைப்பு. (சு)

III. வைதிகர்.

ரு. வைதிகர் தம்மக்கள் இங்கிலீஷ் கற்கத்துணிதல்.

விறகுவெட்டி யேயுண்ட வீரப்பன் மைந்தன்
இரகுபதி யிங்லீஷை யோதி—இருகுதிரைக்
கோச்சிலே செல்கின்றான் கோணமுண் டாசுடனே
வீச்சிலே சாட்டை விரித்து. (க)

தோசைசுட்டு விற்ற சுரணத்தா யின்மகனே
மீசைவைத்து வெண்குதிரை மீதேறிப்—பேசுவரை
டாமென்பான் சன்னப்யே பிட்சென்பான் தன்னையுமே
நாமென்பான் உள்ளம் நயந்து. (உ)

டாம்-Damn; சன்னப்யெ பிட்ச்—Son of a bitch,

வெல்லப் பொரிவிற்ற வீராயி மைந்தனே
பல்லக்கி லேறப் பலபெயர்கள்—சொல்லக்கேள்
ஏமோமூ மென்றே யிரைவர் இடையிடையே
ஓமேமீ மென்பர் உரத்து. (ந)

தித்திப்புக் கள்விற்குஞ் சித்தம் பலம்மகனே
எத்திக்கும் நோக்கி யிடும்புடனே—தத்திக்
குடைபிடிக்க வேபொருவன் குந்திபடி வைத்து
நடையெடுத்துச் செல்வான் நயந்து. (ச)

ஆட்டுக்கோ னானை யரிசிக்குப் பால்கறந்த
மாட்டுக்கோ னான மனிதரெலாம்—நாட்டுக்கே
இந்திரனே யென்கின்றார் ஏக்கந் தணிக்கவந்த
சந்திரனே யென்கின்றார் தாம். (ரு)

பள்ளிக்கே சென்று படித்துப் பணங்குவிக்க
வெள்ளைக்காரர் நாளே வேண்டுநாள்—பிள்ளைகளும்
ஏடுவிட வேண்டும்பின் இங்லீஷை யோதநாம்
பாடுபட வேண்டும் பரிந்து. (சா)

III. வைதிகர்.

௲. வைதிகர் மட்டிடல்.

வாசபெய ரெங்கே மறைநூ லவையத்துப்
பேசவல்ல பெத்தாவ தானியெங்கே—யாசகமே
விட்டனர்தம் மக்கள் விரும்பிப்பொ லீசின்சு
பெட்டரா கக்கண்ட பின்பு. (௧)

சோமயாசி யெங்கே சுருதிக் கடல்கடந்த
சாமுகன பாடியெங்கே சந்தித்தோம்—நாமிவரைத்
திண்டுக்க லேரிக்கண் சப்பெஞ்சி னீர்மக்கள்
குண்டுக்கல் திட்டமிடக் கொண்டு. (௨)

அதிராத் திரரெங்கே அப்தோரி யாமா
விதியே முடித்தசாம வேதி—மதிராசில்
ஆசுபத் திரிக்கே யருகிருப்பர் பிள்ளைபிணங்
காசுக் கறுப்பதையே கண்டு. (௩)

வையா காணியெங்கே வாதக் கடல்கடந்த
நையா யிகரெங்கே நாங்காணோம்—ஐயா
துருக்கர்சே னைக்குச் சுபேதாராய் மக்கள்
இருக்கவே சென்றார் இசைந்து. (௪)

மீமாஞ்சை வாதம் விதியே நடத்தவல்ல
வேமாங் குடிதீ க்ஷிதரெங்கே—கோமாம்சம்
உண்டுபுகைக் கப்பலிலே யூர்ந்துமக்கள் சீமைபுகக்
கண்டிறந்தா ருள்ளங் கசந்து. (௫)

சுருதிக் கிரியளிக்கச் சொர்க்கமென் ஞட்டை
மிருதிக் கிரியளிக்கும் விண்ணா—டிருதுறையும்
மண்ணிலத்துத் தேவர் மறைநூன் மறக்கவே
முண்முளைத்துப் போயினவே மூண்டு. (௬)

நம்மவர் நூற்றெட்டு முற்றிற்று.

Printed at the Swadesamitran Steam Press, Madras.

READY FOR SALE.

BY THE SAME AUTHOR IN ENGLISH.

The Brihat Jataka of Varaha Mihira :—A complete system of Horoscopy providing for the solution of *all* questions of Nativity. Price Rs. Three only.

2. **Jinendra Mala**:—An exhaustive work on horary Astrology by Upendrachariar, providing for the solution of *all* horary questions. Price Rupee one only.

3. **Shatpanchasika** (with Sanskrit Text):—A work on Prasna or horary Astrology by Prithuyasas, son of Varaha Mihira, containing solutions of a number of important horary questions. Price annas eight only.

4. **The Brihat Samhita of Varaha Mihira** A cyclopædia of information on Natural Astrology containing interpretations of over 1000 phenomena of nature and treating of numerous other interesting subjects. [Out of stock, to be ready shortly, orders registered.] Price Rupees Five only.

Padmini :—An interesting Indian Romance in Tamil by V. Muttuswami Iyer M.A. L.T. Used in several schools for non-detailed study. Price As. 12 only. Full Calico and gilt Re. 1 only.

Forty Occasional verses in Tamil by V. Muttuswami Iyer M.A. L.T. Price annas 2 only.

N. VISVANATHA AIYAR,

17, Big Street,

TRIPLICANE.